**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.379/2025**

**Prosecution witness : எ.ம.சா.1** **Date : 28.11.2025.**

| | |
|---|---|
| **Name : Raju (Bank Manager)** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா மேட்டூர் ஆர்எஸ் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையின் பேரில் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். எங்கள் வங்கியில் மதியழகன் என்பவர் சேமிப்பு கணக்கு எண்.4062951910 என்ற எண்ணில் கணக்கு வைத்து பராமரித்து வருகிறார். அழைப்பாணையில் கண்டுள்ளபடி 01.12.2020 முதல் 24.11.2020 வரையிலான கணக்கு பட்டியல் கொண்டு வந்துள்ளேன். கணக்கு பட்டியல் **எ.ம.சா.ஆ.1** ஆகும்.

2) கணக்கு பட்டியலில் ரூ.25,000/- மேல் எந்த வரவு செலவும் செய்யவில்லை என்றால் ஆமாம். ஒரே ஒரு நகை கடன் மட்டும் பெற்றுள்ளார். காசோலை தொகை ரூ.4,00,000/- மட்டுமே உயர்ந்த பட்ச தொகையாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

**குறுக்கு விசாரணை-**

3) வங்கி காசோலை எங்கள் வங்கியில் செலுத்தப்பட்டது என்றால் ஆமாம். காசோலையில் உள்ள கையொப்பம் குறித்து எந்த வேறுபாடும் இல்லை என்றால் ஆமாம். என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் exceed arrangement என்று திருப்பப்பட்டது. ஒரு தொகையை குறிப்பிட்டு காட்டி அதற்கு மேல் எந்த காசோலையும் பணமாக்ககூடாது என எழுதி கொடுத்தால் அது வங்கிக்கு வங்கி மாறுபடும். ரூ.10,00,000/- வரை கூட கொடுக்கலாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.